உ



ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.




# நாடகப்பிரியா

29, 5வது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தவெளிப்பாக்கம், சென்னை - 600 028, இந்தியா

✆ :2464 1789 + 2464 0789, Mobile : 98410 23545 Fax :91-44-495 2354

E-mail : natakhapriya@gmail.com, sveshekher@gmail.com

websites : www.sveshekher.com + www.tamildrama.com + www.tamizhnaadagam.com

பேரன்புடையீர், வணக்கம்!

வரும் 7.5.2010 வெள்ளிக்கிழமை, மாலை 6.00 மணி அளவில் எங்கள் நாடகப்பிரியாவின் **5600** வது நாடக விழா சென்னை **நாரதகான சபா** அரங்கில் சிறப்புற நடைபெற உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். **மு.கருணாநிதி** அவர்கள்
விழாவிற்கு தலைமையேற்று கலைஞர்களுக்கு பரிசளிக்க
அன்புடன் இசைந்துள்ளார்கள்

மாண்புமிகு தமிழக துணை முதல்வர் டாக்டர். **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
விழா மலரை வெளியிட்டு சிறப்புரையாற்ற அன்புடன் இசைந்துள்ளார்கள்

பத்மஸ்ரீ **நல்லி குப்புசாமி செட்டியார்** அவர்கள்,
டாக்டர். **திரிசக்தி சுந்தர்ராமன்** அவர்கள்
திரு. **இராமநாராயணன்** அவர்கள் (தலைவர் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும்)
திரு.R. **கிருஷ்ணசாமி** மூத்த வழக்கறிஞர் அவர்கள் (தலைவர், நகர சபாக்களின் கூட்டமைப்பு)
வாழ்த்துரை வழங்க அன்புடன் இசைந்துள்ளார்கள்

"**அல்வா**" நாடகத்துடன் நடைபெறும் இந்த சந்தோஷ வேளையில் நீங்களும் தவறாமல் கலந்து கொண்டு எங்களை வாழ்த்த வேண்டுகிறோம்.



என்றும் அன்புடன்

**எஸ்.வி. சேகர்** M.L.A.,

நாடகப்பிரியா நண்பர்கள்



**கடவுள் நம்மிடம் இருக்கும்வரை**
**நமக்கு எதிரிகளே கிடையாது**

S.VE. SHEKHER
Member, Legislative Assembly
Mylapore, Tamilnadu

எஸ். வி. சேகர்
சட்டமன்றஉறுப்பினர்
மயிலைத் தொகுதி, தமிழ்நாடு

Mobile: +91 98410 23545
MYLAPOREMLA@GMAIL.COM

**29, 5th Cross Street, Mandavelipakkam, Chennai - 600 028. INDIA.**
**Ph: 2464 0789 + 2464 1789,Fax 91-44-2495 2354**

## Dr. எஸ்.வி. சேகர் ஓர் அறிமுகம்

கலை ஞானம் மிக்க சட்டநாதபுரம் வெங்கடராமன் சேகர். “எஸ்.வி. சேகர்” அனைவருக்கும் பிடித்த பெயர். திரைப்பட – நாடக – சின்னத்திரை தொடர் இவற்றின் இயக்குனர் – தயாரிப்பாளர்– கதாசிரியர்– நடிகர். 1963இல் தொடங்கிய இவரது கலைப்பயணம், வெற்றிப் பயணமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எவரையும் புண்படுத்தாத – குபுக்கென்று சிரிக்க வைக்கும் உடனடியாக அவருக்கு மட்டுமே தோன்றும்– உம்மணாமூஞ்சியையும் புன்னகைக்க வைக்கும் – இவரின் ரத்தத்தில்ஊறிய நகைச்சுவைக்குப் பெயர் சேகர் பாணி நகைச்சுவை.

எஸ்.வி.சேகர், படிப்பால் மெகானிக்கல் இஞ்சினியரிங் டிப்ளமோ ஹோல்டர், ஏர் கண்டிஷனிங் அண்டு ரெஃரிஜிரேஷனில் போஸ்ட் டிப்ளோமா ஹோல்டர். தொழிலால் ஒரு ஒளிப்பதிவாளர், நிகழ்ச்சி தயாரிப்பாளர், ஸ்டில் ஃபோட்டோகிராஃபர், வீடியோ கிராஃபர், எடிட்டர், க்ரியேடிவ் ஹெட், நடிகர், டைரக்டர், நாரதர் தமிழ் பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்திருக்கிறார். வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நாடகங்களுக்காக சிறப்பு ஒலிகள் (Sound Effects) தயாரிப்பு, நாடக சம்பந்தப்பட்ட விஷயங்களில் இவற்றில் கைதேர்ந்தவர். Radio & TV Advertising Practitioners Association of India விடமிருந்து “Best All India Programme Producer Award” ஐ தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பெற்றிருக்கிறார். சென்னை வானொலியில் விளம்பரங்கள் வந்த போது வந்த முதல் விளம்பரம் இவர் தயாரித்தது தான். (Lipton Ruby Dust Tea). இலங்கை வானொலிக்காக 275க்கும் மேற்பட்ட ஒலிச்சித்திரங்களை தயாரித்திருக்கிறார்.

முதன் முதலாக முழுதும் வெளிநாடுகளில் (அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், கொரியா, சியோல், இந்தோனேசியா) எடுக்கப்பட்ட அமெரிக்காவில் அருக்காணி தொலைக்காட்சி தொடரை இயக்கி தயாரித்தவர் இவர் தான். முதன் முதலாக ஜப்பான் நாட்டில் தமிழ் கலை நிகழ்ச்சி நடத்தியவர் இவர் தான்.

1974–ல் நாடகத்திற்காக சிங்கப்பூர் சென்று விட்டு திரும்புகையில் கப்பலில் இவர் உருவாக்கியதுதான் இவரது நாடகக்குழுவான நாடகப்பிரியா. இவர் இதுவரை 24 நாடகங்களை தயாரித்து, 5600 முறைக்கும் மேலாக மேடையேற்றியுள்ளார். இவர் கதாநாயகனாகவும், முக்கிய பாத்திரங்களிலும், நடித்த திரைப்படங்களிலும் விரைவில் சதம் அடிக்கப் போகிறார். இவர் தமிழ்நாடு Central Board of Film Censors - Regional Chairperson ஆக பணியாற்றியிருக்கிறார். அதே போல் தன்னுடைய பெரியதம்பி நாடகத்தை அமெரிக்காவின் நியூ ஜெர்சியிலும், வாஷிங்டனிலும், குவைத்திலும் நடத்தினார். இதில் சிறப்பு என்னவென்றால் இவருடன் அந்த நாடகத்தில் மற்ற பாத்திரங்களில் நடித்தவர்கள் அனைவரும் அந்தந்த ஊர்வாழ் தமிழர்களே. இந்த பெருமைமிக்க நிகழ்வு இவர் சாதித்த பல சாதனைகளில் ஒன்று.

வெளிநாட்டு வாழ் தமிழ்மக்களின் அழைப்புக்கிணங்க அமெரிக்கா, கனடா, துபாய், அபுதாபி, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பாங்காங், ஆகிய நாடுகளில் தன் குழுவுடன் தன் நாடகங்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளார். தென்னிந்தியாவிலிருந்து முதல் முறையாக மேற்கண்ட நாடுகளுக்கு சென்றது இவர் குழுதான். அமெரிக்காவில் 32 நாட்களில் தன் நாடகக் குழுவினருடன் 28 முழுநீள நாடகக் காட்சிகளை நடத்தியது இவருடைய பல சாதனைகளில் ஒன்று. **இவரைப் பாராட்டி வந்த பெருமைகளில் சில...** தமிழக அரசின் கலைவாணர்

விருது (1991) கலைமாமணி விருது (1993), மைலாப்பூர் அகடாமியின் Best Comedian விருது தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு Wisdom பத்திரிக்கையின் Best Comedian விருது (1990) Jaycees Outstanding Youth தேர்வு. **இப்படி பல சபாக்களாலும், நிறுவனங்களாலும் இவருக்கு அளிக்கப்பட்ட பட்டங்களில் சில.** நாடக சூப்பர்ஸ்டார், காமெடி சிங், சிரிப்பலை சிற்பி, நாடக வசூல் சக்ரவர்த்தி, நகைச்சுவை தென்றல், நகைச்சுவை இளவரசன், நகைச்சுவை நாயகன், சிரிப்புச் செல்வன், நகைச்சுவை வேதநாயகன், வாணிகலாசுதாகரா நாடககலாசாரதி, நாடகரத்னா. நகைச்சுவை உலக நாயகன், நகைச்சுவை வேதநாயகன்...

1985இல் தன்னுடைய எட்டு முழு நாடகங்களை தொடர்ச்சியாக காலை 07.47 முதல் அடுத்தநாள் விடியற்காலை 01.49 வரை நடத்தியது. Limca Book of Records ஆல் Unsuprpassed Feat of A State Artist ஆக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவர் Sun T.Vக்காக தயாரித்த S.Ve. Shekher Meets S.Ve. Shekher என்ற புதுமையான நிகழ்ச்சியில் இவரே பேட்டி எடுப்பவராகவும், பேட்டி அளிப்பவராகவும் தோன்றியது கண்ணுக்கு விருந்தளித்தது மட்டுமல்லாமல் இவருடைய தனித்தன்மை வாய்ந்த இவரது தொழில்நுட்பத் திறமையும் பறைசாற்றியது. (இந்த நிகழ்ச்சியும் Limca Book of Records இல் இடம் பெற்றது) 17.10.2008 அன்று, இவருடைய அனைத்து நாடகங்களின் கதை, வசனம், இவருடைய நகைச்சுவைத்துணுக்குகள், இவருடைய சமூகப்பார்வைகள், இவருடைய கேள்வி – பதில்கள் அடங்கிய 32 புத்தகங்களை ஒரே சமயத்தில் டாக்டர். ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார். இந்த சாதனையும் Limca Book of Records இல் இடம் பெற்றுள்ளது. இப்படி ஒரே சாதனையாளரின் மூன்று சாதனைகள் Limca புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது எஸ்.வி.சேகர் ஒருவருக்காகத்தான் இருக்கும்.

இவருடைய வண்ணக்கோலங்கள், நம் குடும்பம் தொடர்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. மிக அதிகமானமுறை மறு ஒளிபரப்பு செய்யப்பட்ட சின்னத்திரை தொடர்கள் இவை தான். இப்போது 28 வருடங்கள் கழித்து DVD க்களாகவும் வந்துவிட்டன. இவருடைய நகைச்சுவை தலைமுறையைக் கடந்தது என்பது இதன்மூலம் நிரூபணமாகிறது. இவரது அனைத்து தொலைக்காட்சி தொடர்களும் DVD களாக வந்துள்ளன.

1994 இலிருந்து இவரைப் பற்றிய விளம்பரங்களும், இவருடைய நாடகங்களுக்கு www.shekher.com என்ற Website இல் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு நாடகம் சம்பந்தப்பட்டவருக்கு இப்படி Website வந்தது இதுவே முதல் முறை. ஒருவருடைய நாடகங்கள், டி.வி. தொடர்கள் Audio, Video, புத்தகம், Internet என அனைத்து ரூபத்திலும் வந்தது எஸ்.வி.சேகர் ஒருவருக்குத்தான். Google தேடலில் சுமார் 60,000 இடங்களில் எஸ்.வி.சேகர் உள்ளார்.

எஸ்.வி.சேகர் இதுவரை 50முறைகளுக்கு மேலாக ரத்ததானம் செய்துள்ளார். தன்னுடைய டி.வி. தொடர்களிலும் கண்தானம், ரத்ததானம், குழந்தைகளுக்கு சர்க்கரைக் குறைபாடு, மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பு பற்றி தனித்தனியே ஒவ்வொரு எபிஸோடில் கதையோடு ஒட்டி சொல்லியிருந்தது பலருடைய பாராட்டைப் பெற்றது.

Jaycees, Lions Clubs, Rotary Clubs மற்றும் பல சமூக அக்கறை கொண்ட நிறுவனங்களுக்காக தன் நாடகங்களை நடத்தி பல நலத்திட்டங்களுக்காக பெருமளவு நிதி திரட்டியுள்ளார்.

1977–ஆம் ஆண்டு முதலமைச்சர் வெள்ள நிவாரண நிதிக்காக ஒரு சிறு தொகையை வசூல் செய்து கொடுப்பதில் துவங்கிய இவர் சேவை, தொடர்ந்து பின்னாளில் தன்னுடைய நாடகம் மூலம் இரண்டு இலட்ச ரூபாய் நிதி திரட்டி சென்னை அரசு பொது மருத்துவமனை Neurology பிரிவுக்கு Resperator வாங்குவதற்காக அளித்துள்ளார். Air Cargo Club of Madras இவருடைய நாடகம் நடத்தி 1234567.89 வசூல் செய்து கார்கில் யுத்த நிதிக்கு அளித்தார்கள். முதலமைச்சர் நிதிவழியாக சுனாமி நிதிக்கு 1.5 இலட்ச ரூபாயும் (2004) வெள்ள நிவாரண நிதிக்கு 1 லட்ச ரூபாயும் (2005) அளித்திருக்கிறார். சமீபத்தில் இலங்கை தமிழர்களுக்காகவும், நீலகிரி நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் தன் சட்டமன்ற உறுப்பினருக்கான இரு மாத சம்பளத்தை அளித்துள்ளார்.

NIIT நிறுவனத்தின் கம்பூயட்டர் கல்வித் திட்டத்தின் Each one Teach one திட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தமிழ் நாடக உலகுக்கு இவர் ஆற்றிய பணியின் காரணமாக இவருடைய வேண்டுகோளை ஏற்று தமிழக அரசு நாடகக் குழுக்களுக்கு தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்ய **பாதிகட்டண சலுகை** அறிவித்தது.

1955இலிருந்து ஸ்ரீ சுகர் பப்ளிக் சாரிடபிள் டிரஸ்ட் என்ற பெயரில் ஒரு பொதுத் தொண்டு நிறுவனத்தை இவர் ஏற்படுத்தி அதன் மூலமாக ஏழைக்கு குழந்தைகளுக்கு உடைகள், படிப்பு, புத்தகங்கள், நலிந்தவர்களுக்கு மருத்துவ உதவி, இரத்ததானம், கண்தானம் விழிப்புணர்வு, இலவச கண் அறுவைச் சிகிச்சை முகாம், நீரிழிவு உடையவர்கள், புற்று நோயாளிகள், உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம். போன்றவற்றிற்கும், திருநங்கைகளுக்கும் உதவிகள் செய்து வருகிறார். சுற்றுச்சூழல், உலகவெப்பமயமாதலைத் தடுத்தல், மரம் வளர்ப்பு, இவைகளுடன் Serve the Dead என்ற Project மூலமாக அரசு மருத்துவமனைகளிலிருந்து கோரப்படாத அனாதைப் பிணங்களை வாங்கி முறைப்படி சவ அடக்கம் செய்து வருகிறார்.

மனித நேயமிக்க இவருக்கு நாட்டுப்பற்று மதநம்பிக்கை, தெய்வநம்பிக்கை நிரம்பவே உண்டு. சென்னை மத்யகைலாஷ், சேலம் சுகவனேஸ்வரர் கோவில், மதுரை முத்தப்பசாமி கோவில் ஆகியவற்றில் இவரது இஷ்ட தெய்வமான ஸ்ரீ சுகப்பிரும்ம மகரிஷிக்கு சந்நிதி கட்டியுள்ளார். ரசிகர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு இவர் அளிக்கும் ஸ்லோக அட்டை மிகவும் பிரபலம்.. இந்த அட்டைக்குள் ஸ்ரீ சுப்ரும்ம மகரிஷி அருளிய "கணபதி மாலா சரவண மாமந்திரம்", வாகனவிபத்தில் பாதிப்பு ஏற்படாமலிருக்க சொல்ல வேண்டிய ஸ்லோகம், குருவந்தனம், நோய் நொடியிலிருந்து காத்துக் கொள்ள தன்வந்திரி மந்த்ரம், குழந்தைகள் படிப்புக்கான மந்திரம், துஷ்ட கிரஹங்கள் விலக, காரியங்களில் வெற்றி உண்டாக மந்திரங்கள் உள்ளன.

15 வருடங்களாக தமிழ்நாடு சின்னத்திரை நடிகர்கள், சங்கத் தலைவராகவும் இப்போது ஆலோசகராகவும் தென்னிந்திய நடிகர் சங்க செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார். இன்றைய VIJAY TV அன்றைய GEC TV யின் தலைவராக பொறுப்பேற்று பல நல்ல நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்து வைத்தவர் இவர்.

தற்கொலையை தடுக்கும் ஆலோசனை மையமான ASHA – வின் Brand ambassador ஆக இருந்து வருகிறார். **இவருடைய நாடகப்பணி மற்றும் சமூக** சேவைக்காக அமெரிக்கன் தமிழ்ப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் (Doctor of Letters) கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது.

இவர் தமிழ்நாடு மைலாப்பூர் சட்டமன்ற தொகுதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர். முதன் முதலாக தொகுதியின் பெயரில் Email ID வைத்துக் கொண்ட MLA **(mylaporemla@gmail.com)** இவர்தான். பல வருடங்களாக ஒரே கைபேசி நம்பர் வைத்திருப்பவரும் இவர் தான். (98410 23545) இவருடைய தொலைபேசி எண்கள் அனைத்தும் இவரது Visiting Card, வாழ்த்து அட்டையிலும் இருக்கும். இவர் சட்டமன்றத்தில் பேசி சுடுகாட்டில் இருக்கும் வெட்டியான்களை அரசு ஊழியர்களாக்கப்பட்டதை, தன் வாழ்நாள் சாதனையாக நினைக்கிறார்.

பிராமணர்கள் ஒற்றுமைக்காக Federation of Brahmin Association of Southern Region (FEBAS) அமைப்பை நடத்தி வருகிறார்.. **(www.febasindia.org).**

எஸ்.வி.சேகரின் குடும்பம் திட்டமிட்ட மகிழ்ச்சியான குடும்பம். அன்பான மனைவி உமா மகேஸ்வரி, மகள் அனுராதா சேகர், மருமகன் பரத் சவுந்தர்ராஜன் மற்றும் ஒரே மகன். நடிகர். அஷ்வின் சேகர்.

**If God be with us, who can be against us**

**கடவுள் நம்மிடம் இருக்கும் வரை நமக்கு எதிரிகளே கிடையாது.**



S.VE. SHEKHER
Member, Legislative Assembly
Mylapore, Tamilnadu

எஸ். வி. சேகர்
சட்டமன்றஉறுப்பினர்
மயிலைத் தொகுதி, தமிழ்நாடு

Mobile: +91 98410 23545 MYLAPOREMLA@GMAIL.COM

**29, 5th Cross Street, Mandavelipakkam, Chennai - 600 028. INDIA.**
**Ph: 2464 0789 + 2464 1789,Fax 91-44-2495 2354**

Playwright, Producer, Director, Television, Film and Theatre artiste playing lead roles, S.VE.SHEKHER is a household name with Tamil connoisseurs, popularly known for his punch, quick wit and humor. His hold over the realm of performing arts since 1974 is commendable.

SATTANATHAPURAM VENKATARAMAN SHEKHER, known as S.VE.SHEKHER, is a Diploma holder in Mechanical Engineering with Post Diploma in Air Conditioning and Refrigeration. He is also a Sound Recordist, Programme Producer, Still Photographer, Videographer, Editor and Director. He was the editor for the Tamil Magazine “Naradhar”

S.Ve. Shekher’s Natakhapriya sofar has produced 24 stage plays and performed more than 5200 shows on stage completed 90 films in Tamil. He was the Regional Chair person of Central Board of Film Censors in Tamil Nadu. Has staged plays at all important towns, villages in Tamil Nadu and many state capitals and union territories. On invitation from Tamil population from USA, Canada, Dubai, Abudhabi, Srilanka, Singapore, Malaysia, Indonesia, Thailand and Bangkok he has staged full length plays successfully. He has created history in staging full length dramas with all the members of his troupe in United States of America (Bay to East Coast) - a total of 28 shows in 32 days.

Skekhar was awarded KALAIVANAR AWARD for 1991 and ‘KALAIMAMANI’ in 1993. The Mylapore Academy adjudged him as THE BEST COMEDIAN for three years in succession; Magazine Wisdom chose him as the 1990’s best comedian; the Jaycees honoured him as the OUTSTANDING YOUTH. Some of the titles accorded to him by sabhas and other organisations are: DRAMA SUPER STAR, COMEDY KING, SIRIPPALAI SIRPI; NATAKA VASOOL CHAKRAVARTHI, NAGAICHUVAI THENDRAL, NAGAICHUVAI ILAVARASAN, NAGAICHUVAI NAYAGAN, SIRIPPUCHCHELVAN NAGAICHUVAI VEDHA NAYAGAN, VANI KALASUDHAKARA NATAKA KALASARATHY and NATAKHA RATHNA.

In 1985 he staged eight full length plays at one go (from 07.47 a.m to 01.49 a.m of the following day) and this was acknowledged as unsurpassed feat of a stage artist in

the LIMCA BOOK OF RECORDS. With his technical proviso along with histrionics he produced an unique television show, a real treat, S.Ve.SHEKHER meets S.Ve.SHEKHER", wherein he is both the interviewer and interviewee (Also Entered in Limca Book of Records). Shekher is a regular BLOOD DONAR, and donated more than 50 times. He has been a willing fund raiser for a number of campaigns by the Jaycees, Lions Clubs, Rotary Clubs and several other social organizations. He has associated himself with the NIIT in their EACH ONE TEACH ONE computer literacy program.

Through his drama shekher could collect Rs. 2 Lakhs and donated the same to the Neurology department of General Hospital TO BUY RESPIRATOR Through his play, Air Cargo Club of Madras had collected Rs. 12,34,567.89 for the KARGIL WAR FUND. Also donated to the Chief Minister's Welfare Fund at the right time Rs. 1.5 lakh for Tsunami Fund (2004) and Rs. 1 Lakh for flood relief fund (2005). Donated Two months MLA Salary for Srilankan Tamils & Nilgiri Land Slide Victims.

Dr. J. Jayalalitha had released a total of 32 Books (complete Story & Dialogue of all his stage plays, Joke Book, Answers to the Questions asked by his fans, his social Views) all in his own inevitable humorous way on 17.10.2004, which is the first of its kind in this field. In 1994 Shekher and his plays entered the website / internet field first of its kind for a dramatist. All his plays are available in the internet www.sveshekher.com.

Amercian Tamil University conferred him with **DOCOTRATE** for his Theatrical and Social Services. From 1995 through his Trust, SRI SUKAR PUBLIC CHARITABLE TRUST (EXEMPTED UNDER 80 G IT ACT), he is helping poor students ,Cancer Patients, Physically handicapped, Oldage Homes, Orphanages, Mentally Retarded people, and conducting Awareness programmes for Diabetes, Blood Eye Donations, Juvenile Diabetics, Animal Welfare, greening against Global warming & Doing mass burial of unclaimed deadbodies collected from Government Hospitals under 'Serve the Dead' Project.

S.Ve.Shekher is an elected Member of Legislative Assembly Tamilnadu from Mylapore constituency. An extrovert, he easily mixes with others. Shekher is happily married to Uma Maheswari, and the Shekhers have a daughter Anuradha Shekher, a Son Ashwin Shekher and son-in-law Bharath Sundarrajan.

**If God be with us, who can be against us**

**கடவுள் நம்மிடம் இருக்கும் வரை நமக்கு எதிரிகளே கிடையாது.**





S.Ve. Shekher, M.L.A. donating one month's salary  for the welfare of Srilankan Tamils to the Chief Minister's Relief Fund




S.Ve. Shekher being conferred with the Honorable Doctrate Degree by The International Tamil University, Maryland, U.S.A.




Dr. S.Ve. Shekher, M.L.A. getting wishes from Deputy C.M. Mr. M.K. Stalin for his Doctrate Degree